பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 04 புதன்கிழமை 20.08.2025 கதிர் 284

### இனி இது ரகசியம் அல்ல!

மக்களின் வரிப் பணம் எல்லாவற்றையும் தின்றே தீர்க்கிறார்கள் என்பதைப் போன்று இருக்கிறது நாடாளுமன்றப் புள்ளிவிவரங்கள். ☞ 2

## அரசின் வெளிநாட்டு நாணய கையிருப்பு குறைந்துவிட்டது

### இது எச்சரிக்கை மட்டம் என்கிறார் கபீர் ஹாசிம்

சுற்றுலாத்துறை மற்றும் தேசிய தொழிற்றுறைஊடாகவெளிநாட்டுகையிருப்பை அதிகரித்துக் கொண்டுள்ளதாக ஆளும்தரப்பு குறிப்பிடுவது உண்மையல்ல.2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாத காலப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு உயர்வாக காணப்பட்டது. ஆனால்தற்போது கையிருப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இது சிவப்பு எச்சரிக்கையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமைநடைபெற்றபணச்சூதாட்டத்தை ☞ 2

## இலங்கையர்களுக்கு சூதாட்டத்தை தடைசெய்யும் தீர்மானம் வேண்டும்

### ஹர்ஷன எம்.பி நாடாளுமன்றில் வலியுறுத்து

நாட்டின் கலாசாரத்துடன் பார்க்கும்போது சூதாட்டத்துக்கு கடுமையான விமர்சனம் இருந்து வருகிறது. அதனால் இந்த சூதாட்ட விளையாட்டை சுற்றுலா பயணிகளுக்கு மாத்திரம் அனுமதித்து, இலங்கையர்களுக்கு தடை செய்யும் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும் என்ற யோசனை ஒன்றை நாங்கள் முன்வைக்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைசட்டமூலத்தின்இரண்டாம்வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு ☞ 3

## தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தம்; மக்கள் பொறுத்துக்கொள்ளட்டுமாம்

தபால் சேவை உத்தியோகத்தர்களுக்கு இதற்கு மேல் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவை அதிகரிக்க முடியாது. அதேபோன்று கைவிரல் ரேகைப் பதிவிட முடியாது எனக் கூறுவதையும் ஏற்கமுடியாது. இந்த பிரச்சினைக்கு இம்முறையாவது தீர்வு காண வேண்டும். எனவே இதனால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை சற்றுப் பொறுத்துக் கொள்ளுமாறு பொது மக்களிடம கேட்டுக்கொள்வதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக் களத்தில்நேற்றுசெவ்வாய்கிழமைஇடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களால் 19 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தபால்மா அதிபருடனும், அமைச்சின் செயலாளருடனும் குறித்த தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத் திருக்கின்றன. எனினும் அந்த பேச்சுவார்த் தைகளின் ஊடாக பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை அவர்களிடம் அவதானிக்க முடியவில்லை. ஆனாலும் அவர்கள் முன்வைத்துள்ள பிரச்சினைகளில் 17 விடயங்கள் ☞ 3

## கதவடைப்பைத் தோற்கடித்ததற்கு வடக்கு கிழக்கு மக்களுக்கு நன்றி

### தொழில் பிரதி அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இரண்டாவது தடவையாகவும் இனவாதத்தை தோற்கடித் துள்ளார்கள். கதவடைப்பைத் தோற்கடித்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். சுமந்திரனின் நிலை கவலைக்குரியது. என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குப்படுத்தும்அதிகாரசபைச்சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடன்பெறப்போவதில்லைஎன்றுநாங்கள் ஒருபோதும் குறிப்பிடவில்லை. முன்னாள் அரசுத்தலைவர்மஹிந்தராஜபக்சவின்ஆட்சி காலத்தில்வரையறையற்ற வகையில் அரச முறை கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால்நாடுவங்குரோத்துநிலையடைந்தது.

நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அரசமுறைகடன்கள்பெற்றுக்கொள்ளப்பட்டு அவைமுறையாக நிதிஒழுக்கத்துடன் ☞ 2

## தபால் ஊழியர்கள் பணி நிறுத்தம் 4ஆவது நாளாகவும் தொடர்கிறது

### நேற்று அரசுத் தலைவருக்கு மனு சமர்ப்பிப்பு

தபால் உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்த போராட்டம் இன்றுடன் நான்காவது நாளாகவும் தொடர்கிறது. 19 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தபால் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. நேற்று குறித்த தொழிற்சங்கங்கள் அரசுத் தலைவர் செயலகத்துக்குச் சென்று மனு ஒன்றையும் கையளித்தன.

எனினும் தபால்மா அதிபருடனோ அல்லது அமைச்சருடனோ எவ்வித பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இதுதொடர்பில்நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர்நளிந்தஜயதிஸ்ஸகருத்துவெளியிட்டார். வருகை பதிவு கைரேகை முறைமையை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் வேறு தொழிலைப் பார்த்துக் கொள்ளலாம் என பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

தபால் பரிமாற்ற நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறவில்லை என்ற போதிலும், சில உப தபாலகங்கள் மூலம் அவசர சேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிந்ததாக பிரதிதபால்மா ☞ 2

## அரசுத் தலைவர்களின் உரிமை நீக்கத்தை எதிர்த்து உயர் நீதிமன்றில் 3 வழக்குகள்

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம்தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு 3 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத்விக்கிரமரத்னசபைக்குஅறிவித்தார்.

நாடாளுமன்றம்நேற்றுசெவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. ☞ 6

## கதவடைப்பை பலவீனப்படுத்த ஒரு தரப்பின் செயற்பட்டனர்

### ஆளும்தரப்பினரும் அவர்களில் அடக்கம் என்கிறார் சாணக்கியன்

கதவடைப்புப் பலவீனமடைய செய்ய வேண்டும் என்று ஒரு தரப்பினர் செயற்பட் டுள்ளார்கள். ஆளும்தரப்பின்உறுப்பினர்களும் அவ்வாறுசெயற்பட்டுள்ளார்கள்எனஇலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட கதவடைப்புப் பற்றி அதற்கு ஆதரவு வழங்கியவர்களும், ஆதரவு வழங்காதவர்களும் பல்வேறு விடயங்களை குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் கதவடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கு ஆதரவு தெரிவித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய அரசியல் கட்சிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வர்த்தக சங்கங்கள், சிவில் ☞ 2

## கதவடைப்பு மூலம் ஆளும்தரப்பின் பலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாம்

வடக்கு கிழக்கில் கதவடைப்புப் ஏற்படுத்தியதன் மூலம் ஆளும்தரப்பின் பலமும் ஆளும்தரப்பிற்கு தமிழ் ,முஸ்லிம் மக்களிடையில் உள்ள பெரும் ஆதரவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காகஇதனை ஏற்பாடு செய்த தமிழ் அரசுக்கட்சிக்கு நன்றி கூறுகின்றோம் என தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அஸ்லம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ☞ 6

### அநுர ஒன்று சொல்கிறார், பிமல் வேறொன்று சொல்கிறார்

## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உண்மையான நிலைப்பாடு என்ன?

### ஆளும்தரப்பிடம் சாணக்கியன் எம்.பி. கேள்வி

மாகாண சபைத் தேர்தல் அடுத்தாண்டு நடத்தப்படும் என்று சபை முதல்வர் பிமல் ரத்நாயக்ககுறிப்பிட்டுள்ளார்.அரசுத்தலைவர்அநுர குமார மற்றும் பிரதமர் ஹரினி ஆகியோர் மாகாண சபைத் தேர்தலை இந்தாண்டு இறுதிப் பகுதியில்நடத்தலாம்என்றுகுறிப்பிட்டிருந்தார்கள். மாகாணசபைத்தேர்தல்குறித்துஆளும்தரப்பின் உண்மையான நிலைப்பாடு என்னவென்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற ☞ 2

## வடக்கு கிழக்கில் கதவடைப்பு தோல்வி

### பிரதி அமைச்சர் முனீர் முளப்பரின் கண்டுபிடிப்பு இது

இனம் மதம் என்ற அடிப்படையில் பிளவுபட்டு அரசியல் செய்வதைவிட்டு பொது எதிரியை அறிந்துகொண்டு அதற்காக போராடுவதற்கு ஆளும்தரப்பு ஒன்று தேவை என்ற விடயத்தில் மக்கள் வாழ்கின்றனர். அந்த நோக்கத்தில் மக்கள் இருந்ததாலே வடக்கு கிழக்கில் இடம்பெற்ற கதவடைப்பு போராட்டம் தோல்வியடைந்துள்ளது என தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றம் வழங்கிய தகவலின்படி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றப் பணியாளர்களுக்கு உணவு வழங்குவதற்காகச் செலவிடப்பட்ட தொகை எண்பது கோடி ரூபாய்க்கு மேல். இந்த ஆண்டின் முதல் பாதியை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடு செய்யப்பட்டது. அதன்படி,

2020ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான உணவு மற்றும் பானங்களுக்காக கிட்டத்தட்ட தொண்ணூறு மில்லியன் ரூபாய், 2021இல் பத்து மில்லியனுக்கும் அதிகமான ரூபாய், 2022 இல் எண்பது மில்லியனுக்கும் அதிகமான ரூபாய், 2023 இல் கிட்டத்தட்ட இருபத்தி நான்கு மில்லியன் ரூபாய் மற்றும் 2024 இல் கிட்டத்தட்ட இருபத்தி இரண்டு மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளன. 2020 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கோவிட் தொற்றுநோய் காரணமாக ஊழியர்கள் வேலைக்கு வருவதை கட்டுப்படுத்தியதாலும், நாடாளுமன்றக் கூட்டங்கள் நடத்தப்படாததாலும் உணவு மற்றும் பானச் செலவு குறைக்கப்பட்டுள்ளன.

மக்களின் வரிபணத்தைச் சூறையாடியது மட்டுமல்ல தின்றும் தீர்த்திருக்கிறார்கள். என்னவென்று சொல்வது.

..............................

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் (சிஐடி) மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். ஓகஸ்ட் 22 வெள்ளிக்கிழமை வருமாறு அவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

அரசுத் தலைவராகப் பதவி வகித்தபோது தனது தனிப்பட்ட பயணத்திற்கு அரச நிதியைப் பயன்படுத்தினார் என்பது தொடர்பாகவே ரணில் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பயணம் 2023 ஆண்டு, செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் நடந்ததாகக் கூறப்படுகிறது. இந்தப் பயணத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பத்து பேர் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த விசாரணை தொடர்பாக சிஐடி முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரிடமிருந்து ஏற்கனவே வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது.

ரணில் ஆட்சியில் இருந்தபோது அவர் மீது மத்திய வங்கி பிணை முறி ஊழல் தொடர்பாகத்தான் என்பிபியினர் அதிகளவில் குற்றஞ்சாட்டினர். ஆனால் இப்போது தும்பைவிட்- வலைப் பிடிப்பது போல வெளிநாட்டுப் பயணம் என்ற விடயத்தைத் தூக்கிப் பிடித்துள்ளனர். அதிகாரத்திற்குவந்துவிட்டால் அணுகுமுறையே வேறுமாதிரித்தான் இருக்கும்போலும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கதவடைப்பைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தப்படும். பெற்றுக்கொள்ளப்படும் கடனில் ஒவ்வொரு ரூபாவுக்கும் நாங்கள் பொறுப்புக்கூறுவோம்.

வடக்கு மற்றும் கிழக்கில் நேற்று முன்தினம் அமுல்படுத்தப்பட்ட கதவடைப்பு வெற்றி என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். இந்த கதவடைப்பு தோல்வி என்றே குறிப்பிட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இரண்டாவது தடவையாகவும் இனவாதத்தை தோற்கடித்துள்ளார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிலை கவலைக்குரியது. கடந்த காலங்களில் இவர் நடுநிலையான தன்மையில் செயற்பட்டார் ஆனால் தற்போது தனது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக இனவாத சேற்றுக்குழியில் விழுந்துள்ளார் என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் பல ஆண்டுகாலமாக அரச அதிகாரிகளின் நிர்வாக கட்டமைப்பில் உள்ளது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் இயங்குவது முறையற்றது. இதனால் பெரும் பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தனிநபர் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளேன். இந்தப் பிரேரணையை அரச பிரேரணையாகக் கருதி பழைய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் அடுத்தாண்டு நடத்தப்படும் என்று சபை முதல்வர் குறிப்பிட்டுள்ளார். அரசுத் தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோர் மாகாண சபைத் தேர்தலை இந்தாண்டு இறுதி பகுதியில் நடத்தலாம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆகவே மாகாண சபைத் தேர்தல் குறித்து ஆளும்தரப்பின் உண்மையான நிலைப்பாடு என்ன? மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை ஆளும்தரப்பு அறிவிக்க வேண்டும். என்றார்.

இதற்கு எழுந்து பதில மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன எந்த தேர்தலையும் பிற்போடவேண்டும் என்ற நோக்கம் ஆளும்தரப்புக்கு கிடையாது. அரச நிர்வாக கட்டமைப்புக்கு அமையாகவே மாகாண சபைகள் இயங்குகின்றன. மாகாண சபைத் தேர்தலை நடத்தும் வரை மாகாண சபைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணாமல் இருக்க முடியாது. ஆகவே தீர்வுகாண நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும் என்றார்.

## தபால் ஊழியர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் தெரிவித்தார். தொழிற்சங்கங்களுடன் தாம் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருப்பதாகவும், வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்புமாறு கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் கொழும்பில் மத்திய தபால் பரிமாற்ற சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. இதனால் சுமார் 15 இலட்சம் கடிதங்கள், பொதிகள் தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை வேலை நிறுத்த போராட்டத்தை கைவிடப் போவதில்லை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன

## கதவடைப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் உட்பட பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

முல்லைத்தீவு இளைஞனின் இறப்பை அடிப்படையாகக்கொண்டு இந்தகதவடைப்புக்கு அழைப்பு விடுத்தோம். இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் திரிபுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கதவடைப்பு தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சரவை பேச்சாளர் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இராணுவத்தின் ஊடகப்பேச்சாளரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் கலந்துக்கொண்டார்கள். இதனைத் தொடர்ந்தே கதவடைப்புப் மதியம் வரை வரையறுக்க தீர்மானித்தோம்.

உயிரிழந்த இளைஞனுக்கும், இராணுவத்தினருக்கும் தொடர்புள்ளது. அதனடிப்படையில் இராணுவ படையினர் ஒருசிலர் கைது செய்யப்பட்டார்கள் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தின் நிலைப்பாட்டுக்கும், பொலிஸாரின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்கமுடிகிறது. இராணுவமுகாமுக்குள் வந்தஒருஇளைஞனைஅவரதுகுடும்பத்தாரிடம் ஒப்படைத்ததாக இராணுவ ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். முகாமுக்குள் அத்துமீறிய வகையில் இவர்கள் சென்றிருந்தால் அவர்களை கைது செய்து பொலிஸில் ஒப்படைத்திருக்க வேண்டும். இவ்விடயத்தில் தெளிவான சிக்கல் காணப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கில் பொதுமக்கள் மத்தியில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்திவருகிறோம். எம்மை இனவாதியாக சித்தரிக்க ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நூற்றுக்கு நூறு சதவீதம் கடைகள் மூடப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். கதவடைப்புப் பலவீனடைய செய்ய வேண்டும் என்று ஒரு தரப்பினர் செயற்பட்டுள்ளார்கள். ஆளும்தரப்பின் உறுப்பினர்களும் அவ்வாறு செயற்பட்டுள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்யுங்கள் என்று வலியுறுத்துகிறோம். நாங்கள் ஜனநாயகக் கொள்கைக்கு அமைவாகவே செயற்படுகிறோம். எமது பிரச்சினைகளுக்கு இணக்கமான தீர்வினையே எதிர்பார்க்கிறோம் என்றார்.

## இலங்கையர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சூதாட்டச்சட்டமூலம் கடந்த ஆளும்தரப்பின் காலத்தில் கொண்டுவரப்பட்டபோது, அன்று எதிர்க்கட்சியில் இருந்த அநுரகுமார திஸாநாயக்க, அந்த சட்டமூலத்தை கடுமையாக விமர்சித்ததுடன் நாட்டை சூதாட்ட சந்தையாக்கப்போவதா என கேள்வி எழுப்பி இருந்தார். அவ்வாறு விமர்சித்த அநுரகுமார திஸாநாயக்க, இன்று நாட்டின் அரசுத் தலைவர்யாக கசினோ நிலையத்தை ஆரம்பித்துவைக்க சென்றிருந்தார். அதேநேரம் கசினோ வியாபாரத்தை பலப்படுத்தும் வகையில் தற்போது சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்நிலையில் எங்களையும் இவர்கள் விமர்சிக்கின்றனர்.

எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் சூதாட்ட சட்டமூலத்துக்கு எதிர்ப்பு இல்லை. இதனை கண்காணித்து, இதற்கு அதிகாரசபை ஏற்படுத்த வேண்டும். அந்த அதிகாரசபை சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்றே தெரிவிக்கிறோம். இதுதொடர்பில் சுயாதீன அதிகாரசபை ஒன்று இல்லாமல், அமைச்சருக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம் பெரும்ளவில் மோசடிகள் இடம்பெற வாய்ப்பு இருக்கின்றன. அதனால் இந்த அதிகாரசபையின் பதவிகள் அரசியலமைப்பு சபையின் கீழ் கொண்டுவந்து, இதன் சுயாதீனத்தன்மையை பாதுகாக்க வேண்டும்.

சூதாட்ட விளையாட்டை அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றுலா பயணிகளை மேலும் அதிகரித்துக்கொள்ளலாம். அதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளலாம். அது உண்மை. அதேநேரம், எமது நாட்டின் கலாசாரத்துடன் பார்க்கும்போது. இதற்கு கடுமையான விமர்சனமும் இருக்கிறது. அதனால் இந்த சூதாட்ட விளையாட்டை சுற்றுலா பயணிகளுக்கு மாத்திரம் அனுமதித்து, இலங்கையர்களுக்கு தடைசெய்யும் ஒருதீரமானத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற யோசனை ஒன்றை நாங்கள் முன்வைக்கிறோம். இதனை உண்மையாகவே தெரிவிக்கிறோம். இப்படியான பல நாடுகள் இருக்கின்றன. சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளில் இவ்வாறுதான் செயற்படுத்தப்படுகின்றன. அதனால் எமது நாட்டிலும் சூதாட்ட விளையாட்டுக்களை சுற்றுலாபயணிகளுக்குமாத்திரம் அனுமதித்து, எமது நாட்டவர்களுக்கு தடை செய்ய நடவடிக்கை எடுப்பதன் மூலம் எந்த பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை.

அதேபோன்று கஞ்சா செடி வளர்ப்பதற்கு மீரிகம பிரதேசத்தில் முதலீட்டு சபைக்கு உரித்தான காணியை வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அதன் உண்மை தன்மை தொடர்பில் ஆளும்தரப்பு தெளிவுபடுத்த வேண்டும். முன்னாள் அமைச்சர் ஒருவர் கஞ்ஞாவுக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்தபோது, அதற்கு அன்று கடும் விமர்சனம்செய்த இவர்கள், தற்போது இதற்கு அனுமதிக்கின்றனர். இவ்வாறுதான் இவர்கள் கடந்த காலங்களில் எதிர்த்த பல விடயங்களை தற்போது அனுமதித்துவருகிறார்கள். அரிசி இறக்குமதி செய்வதில்லை என்றார்கள். தற்போது இறக்குமதி செய்கிறார்கள். அரிசி ஆலை உரிமையாளர்களை மண்டியிடச்செய்வதாக தெரிவித்தார்கள். ஆனால் தற்போது அரசாங்கே அரிசி ஆலை உரிமையாளர்களிடம் மண்டியிட்டுள்ளது. எனவே ஆளும்தரப்பு ஆட்சிக்கு வரும்போது பல வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்திருந்தது. அந்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. அதனால் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கிறோம் என்றார்.

## அரசின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் ஜே.ஆர் ஜயவர்தன திறந்த பொருளாதாரக் கொள்கைக்காக பலவெளிநாட்டுமுதலீடுகளை நாட்டுக்கு கொண்டுவந்தார். மக்கள் விடுதலை முன்னணி உள்ளடங்களாக இடதுசாரி கட்சிகள் அதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டன.

நாட்டின் பொருளாதார சாபத்தின் பிரதான பங்காளி மக்கள் விடுதலை முன்னணி என்றே குறிப்பிட வேண்டும். கடந்த கால அரசாங்கள் காலத்தின் தேவையறிந்து கொண்டு வந்த சகல அபிவிருத்தி திட்டங்களுக்கும் மக்கள் விடுதலை முன்னணியே எதிர்ப்பு தெரிவித்து அனைத்தையும் இல்லாதொழித்தார்கள். அன்று எதிர்த்த முதலீட்டுத் திட்டங்களை இன்று ஏற்கிறார்கள் இதனையே கர்மவினை என்றே குறிப்பிட வேண்டும்.

பணச்சூதாட்டத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபை ச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மத அடிப்படையில் சூதாட்டத்துக்கு நாங்கள் எதிர்ப்பு .பொருளாதார மீட்சிக்குரிய ஒரு முறைமையாக இதனை ஆளும்தரப்பு அறிமுகப்படுத்துகிறது. பணச் சூதாட்டம் முறையான ஒழுங்குப்படுத்தப்படவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம்.

இந்த சட்டமூலம் பல குறைப்பாடுகளுடன் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்படும் அதிகாரசபைக்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் நிதியமைச்சின் செயலாளர் மற்றும் நிதியமைச்சரால் நியமிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் முறையற்றது. இந்த அதிகார சபைக்கான நியமனம் அரசமைப்பு பேரவை ஊடாக வழங்கப்படவேண்டும்.

அத்துடன் அதிகார சபைகளின் சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை தயாரிக்கும் அதிகாரம் நிதியமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது திருத்தப்பட வேண்டும். நிதியமைச்சரை பிரதான சூதாட்டகாரராக மாற்றும் வகையில் இந்த சட்டமூலத்தில் பல விடயங்கள் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

சீன எக்சிம் வங்கியிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெற்று மத்திய அதிவேக நெடுஞ்சாலையை அபிவிருத்தி செய்வதாக அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு இதுவரையான காலப்பகுதியில் 335 மில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட கடன் கிடைக்கப்பெற்றுள்ளது. அத்துடன் பல்தரப்புநிதி நிறுவனாங்களிடமிருந்து 95 மில்லியன் டொலர் வரையின் கடனுதவி கிடைக்கப்பெற்றுள்ளன.

சுற்றுலாத்துறை மற்றும் தேசிய தொழிற்றுறை ஊடாக வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்துக் கொண்டுள்ளதாக ஆளும்தரப்பு குறிப்பிடுவது உண்மையல்ல, 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாத காலப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு உயர்வாக காணப்பட்டது. ஆனால் தற்போது கையிருப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இது சிவப்பு எச்சரிக்கையாகும்.

வெளிநாட்டு கையிருப்புக்களை அதிகரித்துக்கொள்வதற்கு முறையான மற்றும் நிலையான திட்டங்களை செயற்படுத்தாமல் சீனாவிடமிருந்து கடன் பெற்று அதிவேக நெடுஞ்சாலையை அபிவிருத்தி செய்வதாக அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். வெளிநாட்டு கையிருப்பு குறைவடைந்தால் பொருளாதார முகாமைத்துவத்தில் பெரும் நெருக்கடிகள் ஏற்படும் என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு பிளவுபட்டு இன்று நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தில் இருக்கும் 52 பேர் எதிர்க்கட்சியில் அமரப்போவதாக சமூகவலைத்தலங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இதுதொடர்பில் பலரும் எங்களிடம் கேட்டனர். அதற்கு

தொடர்ச்சி 6ம் பக்கம்...

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான், எண்ணிக்கையில் தவறு ஏற்பட்டுள்ளது.நாங்கள் ஆட்சிக்கு வந்த நாள் முதல் எங்களில் 43பேர் தொடர்ந்து எதிர்க்கட்சி பக்கமே அமர்ந்திருக்கின்றனர் என்று தெரிவித்தேன்,

எதிர்க்கட்சிக்கு விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லாத சந்தர்ப்பத்தில், சமூகத்தில் பொய் கருத்துக்களைபரப்பிவருகிறார்கள்.அரசியலில் தொண்டைக்குகளவாகமருந்துகுடிக்காதவர்கள் எங்களை விமர்சிக்கின்றனர்.இந்தசட்டமூலம் தொடர்பான விவாதத்தில் பல்வேறு பாபியாகள் தொடர்பில் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அந்த அனைத்து மாபியாக்களும் தங்களின் அரசியல் பயணத்துக்காகவே கட்டியெழுப்பப்பட்டன என்பதை அவர்கள் மறந்துள்ளனனர்.

எமது நாட்டில் காலம் தொட்டு தெற்குக்கு புரியாவிட்டாலும் வடக்கு கிழக்குக்கு ஹர்த்ததால் என்ற சொல் பிரபல்லியமாகும். ஒருசில தோற்றுப்போன அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து திங்கட்கிழமை கதவடைப்புக்கு மக்களுக்கு அழைப்பு விடுத்தன.என்றாலும் அந்த கதவடைப்பு போராட்டம் தா ல்வியடைந்துள்ளதை சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

தேர்தலிலும் தோல்வியுற்று மக்கள் மத்தியிலும்எதிர்க்கட்சிதோல்வியடைந்துள்ளது. முஸ்லிம்காங்கிரஸின்எபதலைவர்இருக்கும் காத்தான்குடியில் கதவடைப்பு பா ராட்டம் தோவியடைந்துள்ளது. அரசியல் செய்வதற்கு தலைப்பு இல்லாமல்போகும்போது. பல்வேறு தலைப்புகளைஏற்படுத்துவதற்குஎதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன..

அறுகம்பை விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஒரு கருத்தை தெரிவிக்கும்போது,அவரது கட்சியின் பொத்துவில் பிரதேச சபையின் தலைவர் வேறு நிலைப்பாட்டில் இருக்கிறார். மக்களை கோபமடையச்செய்ய முன்னர், பொய்யான செய்திகளை சமூக மயமாக்குவதற்கு முன்னர் தங்களின் கட்சியை சரி செய்துகொள்ளுமாறு தெரிவிக்கிறோம். சூதாட்டம் தொடர்பில் முஸ்லிம் பக்தர் என்றவகையில் எங்களுக்கு கொள்கை ரீதியில் ஒரு நிலைப்பாடு இருக்கிறது என்றார்.

## தபால் ஊழியர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளன. ஏனையவை தற்போது தீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நியமனங்கள், இடமாற்றங்கள், ஆட்சேர்ப்புக்கள் உள்ளிட்டவற்றுக்கான செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அவர்களும் அறிவர். தபால் திணைக்களத்துக்கான வாகன தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு 250 பில்லியன் ரூபா இவ்வாண்டுக்கான வரவு -செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மறுபுறம் தபால் செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன

புதிய தபாலகங்களுக்காக 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தபால் துறைக்கு இதற்குமுன்னர்வழங்கப்பட்டிராதமுன்னுரிமை எமது ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளது. எனவே தற்போது எஞ்சியுள்ள இரு பிரதான பிரச்சினைகள் வருகையைப் பதிவு செய்வதற்கான கைவிரல் ரேகைப் பதிவு இயந்திரம்மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவாகும். சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் இவ்வாண்டு ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அடிப்படை சம்பள அதிகரிப்பின் முதற்கட்டம் கடந்த ஏப்ரலிலிருந்தும், இரண்டாம் கட்டம் 2026 ஜனவரியிலிருந்தும், அடுத்த கட்டம் 2027 ஜனவரியிலிருந்தும் வழங்கப்படும்.

அதற்கமைய அடிப்படை சம்பளம் பெரும்ளவில் அதிகரிக்கப்படுகிறது. எனவே தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக எவருக்கும் கூற முடியாது. யாரும் கேட்காதளவுக்கு சிறந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை சம்பள அதிகரிப்பிற்கமையவே மேலதிக வேலை நேர கொடுப்பனவு கணக்கிடப்படுகிறது. 2027 ஜனவரியில் கிடைக்கவுள்ள அடிப்படை சம்பளத்துக்கமையவே இவ்வாண்டு மேலதிக வேலைநேரகொடுப்பனவுகணக்கிடப்படுகிறது. எனினும் சில துறைகளில் அந்தளவு மேலதிக வேலை நேர கொடுப்பனவை வழங்கினால் அது திறைசேரிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும்.

எனவே அவ்வாறான சேவையிலுள்ளோருக்கு நான்கில் மூன்று, ஆறில் ஐந்து என்ற அடிப்படையில் மேலதிக வேலை நேர கொடுப்பனவு வழங்கப்படுகிறது. தபால் சேவையில் சுமார் 23 000 உத்தியோகத்தர்கள் உள்ளனர். அவர்களுக்கு 2027 ஜனவரியில் கிடைக்கவுள்ள அடிப்படை சம்பளத்துக்கமைய மேலதிக வேலை நேர கொடுப்பனவு கணக்கிடப்பட்டு அதில் ஆறில் ஐந்து என்ற ரீதியில் வழங்கப்படுகிறது. இது போதாது எனக் கூறினால் அது நியாயமற்றது. அரச சேவை தொடர்பில் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள கொள்கைரீதியான தீர்மானம் இதுவாகும். எனவே இதில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. மேலதிக வேலை நேர கொடுப்பனவு தொடர்பில் இனி பேசுவது பிரயோசனமற்றது.

இவ்வாறு அடிப்படை சம்பளமும், மேலதிக வேலை நேர கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், தபால் சேவை ஊழியர் ஒருவர் தனது வருகைஷ்யும் வேலை முடிவடைந்து செல்வதையும் கைவிரல் ரேகைப் பதிவு இயந்திரம்செய்ய முடியாது எனக் கூறினால் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்கனவே தபால் திணைக்களத்தின் நிர்வாக அலுவலகங்களில் கைவிரல் ரேகைப் பதிவு இயந்திரம்இயந்திரங்கள்பொறுத்தப்பட்டுள்ளன. மத்தியதபால்பரிமாற்றத்திலுள்ளமிகக்குறுகிய தரப்பினரே இதனை ஏற்க மறுக்கின்றனர்.

மக்களின் வரிப் பணத்தில் சம்பள அதிகரிப்பினையும் வழங்கி மேலதிக வேலை நேர கொடுப்பனவையும் வழங்கியுள்ள நிலையில் ஆளும்தரப்பின் தீர்மானத்தை ஏற்க முடியாது எனக் கூறினால் அதற்கு இடமளிக்க முடியாது. 19 கோரிக்கைகளில் எஞ்சியுள்ள இந்த இரு கோரிக்கைகளையும் எக்காரணத்துக்காகவும் ஏஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இதற்கு தெரிவிப்பவர்கள் தமக்கு பொறுத்தமான வேறு தொழிலை தேடிக் கொள்ளலாம். இம்முறையாவது இந்த பிரச்சினைக்குதீர்வுகாணவேண்டும். எனவே இதனால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களை சற்றுப் பொறுத்துக் கொள்ளுமாறு பொது மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## அரசுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போதே இதனை சபைக்கு அறிவித்தார்.

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம்தொடர்பாக உயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளன என்றார்.

## கதவடைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் நடைபெற்ற கதவடைப்பு போராட்டத்தை தமிழ் சமூகம் தோல்வியடைய செய்துள்ளது. யாழில் கதவடைப்பு தோல்வியடைந்ததால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வவுனியாவுக்கு சென்று மூக்கை உடைத்துக்கொண்டு வந்தார். இலங்கை தமிழ் அரசுக் கட்சியினால் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் சிறீதரன் முற்பகல் 10 மணியளவிலேயே அந்த போராட்டத்தை முடிவுறுத்தியுள்ளார்.

கதவடைப்பு விடயத்தில் யாழ். மாநகர சபை முதல்வரும் மட்டக்களப்பு மாநாகர சபை முதல்வரும் நடந்து கொண்ட முறை கேவலமானதாக இருந்தது. இவர்கள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததை காணக்கூடியதாக இருந்தது. தமது அதிகார பிரதேசங்களில் கடைகளை மூடுமாறு பலவந்தமாக கூறினர். சிலர் அச்சத்தில் கடைகளை மூடிய நிலைமை காணப்பட்டது. அதேபோன்று முஸ்லிம் காங்கிரஸ் இதற்கு ஆதவளிப்பதாக கூறியிருந்தது. ஏன் இவ்வாறு கூறினர் என்று தெரியவில்லை.

அதேபோன்று மனோகணேசன் மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோரும் அவ்வாறு

தொடர்ச்சி 3ம் பக்கம்...

உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிகாரங்களைப் பறிப்பதற்கு தமிழர்களே உந்துதலா?

**இலங்கை அரசியல் வரலாற்றில் 13ஆவது திருத்தம் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. 1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை உடன்படிக்கையின் கீழ் கொண்டு வரப்பட்ட இத்திருத்தம், மாகாண சபைகள் வழியாக மக்களுக்கு சில அதிகாரங்களை வழங்குவதாக இருந்தது. குறிப்பாக, கல்வி, சுகாதாரம், வேளாண்மை போன்ற துறைகள் மாகாணங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டன. இவை தமிழர்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகளின் விளைவாக நிகழ்ந்தன. தமிழர்கள் தமது அரசியல் கோரிக்கைக்கான தீர்வாகவோ தீர்வுக்கான அடிப்படையாகவோ அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டதில்லை என்றபோதும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசமைப்பில் காணப்படும் ஒரேயொரு விடயம் அது மட்டுமே.**

**ஆனால், 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் எப்போதுமே பாதியிலேயே நிற்கிறது. மத்திய அரசு எப்போதும் மாகாணங்களுக்கு வழங்கவேண்டிய அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொள்வதிலேயே ஆர்வமாக இருக்கிறது. அதற்கும் மேலே சென்று மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட சொற்ப அதிகாரங்களைக்கூட நேர்வழியிலும் பின்கதவாலும் பறித்தொடுப்பதிலும் அது குறியாக இருக்கின்றது. இந்தப் பின்புலத்தில், மாகாண சபைகளுக்குக் கிடைத்திருந்த சுகாதாரத் துறையின் அதிகாரங்களை மத்திய அரசுக்கு மீண்டும் திருப்பி அளிக்கச் செய்யும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு தமிழர்களே உந்து சக்தியாக இருப்பது மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் தருகிறது. குறிப்பாக, மன்னார் ஆயர் ஞானப்பிரகாசம் ஆளும்தரப்புக்கு இப்படிப்பட்ட உந்துதலை வழங்குவதாக வெளிவரும் தகவல்கள் கவலையூட்டுகின்றன.**

**மாகாண சபைகளுக்கு சுகாதாரத் துறையில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் வெறும் அரசியல் சலுகை அல்ல. அது மக்கள் நலனோடு நேரடியாக இணைந்த ஒன்று. ஒரு மாகாணத்தில் எந்த மருத்துவமனைக்குத் தேவையான வசதிகள் உள்ளன, எங்கு குறைவுகள் இருக்கின்றன, எந்த இடத்தில் வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர் என்பதனை மாகாணத்திலிருந்தே தீர்மானிக்க முடியும். சுகாதார சேவைகள் மக்களின் அன்றாட வாழ்வின் அடிப்படைத் தேவையாக இருக்கும்போது, அவற்றின் மேலாண்மை மாகாண மக்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் அடிப்படை உண்மை.**

**ஆனால், இத்தகைய அதிகாரங்களை மத்திய அரசின் கைகளுக்கு மீண்டும் திருப்பிவிடுவது, மக்களிடமிருந்து அந்த உரிமையை பறித்துவிடுவதற்குச் சமமாகும். மாகாண சபையின் வைத்தியசாலைக்கு ஒதுக்கப்படும் நிதி அளவைவிட மத்திய அரசின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியும் வசதிகளும் உபகரணங்களும் அதிகம் என்கிற அடிப்படையில் இத்தகைய கோரிக்கைகள் எழுகின்றன. இது ஆதாயங்களைக் குறுக்கு வழியில் தேடுவதற்காக அதிகாரங்களை மத்திய அரசிடமே திருப்பி ஒப்படைப்பதற்கு ஒப்பான செயல். இது முற்றிலுமாக நிறுத்தப்படவேண்டும். தேசிய பாடசாலைகள் திட்டத்தின் மூலம் மாகாண பாடசாலைகளின் அதிகாரங்களை மத்திய அரசு கையகப்படுத்தியதைப் போலவே இப்போது வைத்தியசாலைகளையும் தன்வசப்படுத்தும் அதன் முயற்சிக்கு ஆதரவளிக்கும் இத்தகைய போக்குகள் உடன் நிறுத்தப்படவேண்டும். அதற்குப் பதிலாக சுகாதாரத்துறை மாகாண சபைகளிடம் முற்றிலுமாகக் கையளிக்கப்பட்டு அதற்குத் தேவையான நிதி உதவி வழங்கப்படுவதை மத்திய அரசிடமிருந்து உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படவேண்டும்.**

**தமிழர்களின் அரசியல் போராட்டம் எப்போதுமே அதிகாரப் பங்கீடு, சுயாட்சித் தன்மை, தன்னாட்சி போன்றவற்றை மையமாகக் கொண்டது. அந்தக் கோரிக்கைகளை முன்னிறுத்தி பலப்பல ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டதையும் நாம் மறக்க முடியாது. ஆனால், இப்போது தமிழர்களே மத்திய அரசின் அதிகார பறிப்புக்கு உந்துதல் கொடுப்பதாகக் காணப்படும் நிலை, தமிழர் அரசியல் வரலாற்றுக்கு முற்றிலும் எதிரான விடயமாகும்.**

**மன்னார் ஆயர் ஞானப்பிரகாசம் சுகாதாரத் துறையின் மேலாண்மையில் மாகாண சபைகள் பலவீனமாக உள்ளன என்பதற்காக மத்திய அரசிடம் அதிகாரங்களைமீண்டும்எடுத்து விடவேண்டும்எனக்கூறுவதாகத்தெரியவருகிறது. இது உண்மை எனில், அது தவறான வழிநடத்தலாகும். மாகாண சபைகளில் குறைகள் இருக்கலாம். நிர்வாகத்தில் பிழைகள் இருக்கலாம். ஆனால், தீர்வு மாகாண அதிகாரங்களை பறிப்பது அல்ல. தீர்வு அந்த நிர்வாகக் குறைகளைச் சீர்செய்வதே ஆகும்.**

**மத்திய அரசு பல ஆண்டுகளாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயங்கிக் கொண்டே இருக்கிறது. காவல்துறை, காணி போன்ற முக்கிய அதிகாரங்கள் இன்றளவும் மாகாணங்களுக்கு வழங்கப்படவில்லை. இப்போது வழங்கப்பட்டிருக்கும் சுகாதார அதிகாரங்களையும் பறிக்க முயற்சிப்பது, மத்திய அரசின் அடக்குமுறை போக்கை மேலும் வெளிப்படுத்துகிறது.**

**இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு தமிழர்களே ஆதரவாக இருப்பது, மத்திய அரசுக்குத் தேவைப்பட்டிருக்கும் காரணத்தை வழங்கிவிடுகிறது. அதுவே மிகவும் ஆபத்தான ஒன்று. தமிழர்கள் தாங்களே தங்களது வரலாற்றுப் போராட்டத்தின் அடித்தளங்களை அழித்துக்கொள்வது போன்றே ஆகிவிடும்.**

**சுகாதாரத் துறையின் குறைகளை சீர்செய்ய வேண்டியது அவசியம். மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை, வைத்தியர்கள் பற்றாக்குறை, உபகரணங்களின் பின்தங்கல் ஆகியவை மக்களுக்கு பெரும் துன்பங்களை அளிக்கின்றன. ஆனால், இதற்கான தீர்வு மத்திய அரசிடம் அதிகாரங்களை ஒப்படைப்பது அல்ல. மாறாக, மாகாண சபைகளின் திறனை அதிகரிப்பது, நிதி ஒதுக்கீட்டை உயர்த்துவது, மேலாண்மையை மேம்படுத்துவது ஆகியனவே.**

**இன்றைய சூழலில் மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறித்துவிட்டால், அது தமிழர்களின் அரசியல் எதிர்காலத்திற்கு மிகப்பெரும் பின்னடைவாக மாறிவிடும். ஒருமுறை பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பெறுவது சாத்தியமே ஆகாது.**

**13ஆவது திருத்தம் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட மிகச் சிறிய அரசியல் இடம். அதையும் பறிக்க முயல்கின்ற மத்திய அரசுக்கு ஆதரவாக சில தமிழர்கள் குரல் கொடுப்பது வரலாற்று தவறாகும். மாகாண சபைகளின் பலவீனங்களை சுட்டிக்காட்டுவது தவறு அல்ல. ஆனால், அதன் அடிப்படையில் அதிகாரங்களை மத்திய அரசுக்கு ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்துவது, தமிழர்களின் தன்னாட்சிக் கோரிக்கைக்கு எதிரானது.**

**மன்னார் ஆயர் ஞானப்பிரகாசம் எடுத்துக்கொண்ட நிலைப்பாடு உண்மை எனில், அது மிகவும் கவலைக்குரியது. தமிழர்கள் தங்கள் அரசியல் வரலாற்றை நினைவுகூர்ந்து, மத்திய அரசின் அதிகாரப் பறிப்புக்கு ஆதரவாக நிற்பதை விட, மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பாதுகாக்கவும், மேலும் விரிவாக்கவும் போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.**

# மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வருக

## அரசுத் தலைவரிடம் ஆயர் ஞானப்பிரகாசம் வலியுறுத்து

மாகாண அரசின் கீழ் உள்ள மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டுவரவேண்டும் என்று அரசுத் தலைவர் அநுரகுமாரவைச் சந்தித்து வலியுறுத்தியுள்ளார் மன்னார் மறை மாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம்.

இவர்கள் இருவர் இடையிலான சந்திப்புக் குறித்து மன்னார் மாவட்ட குரு முதல்வர் தமிழ் நேசன் தெரிவித்ததாவது:

திங்கட்கிழமை மன்னார் ஆயர் மேதகு ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் இலங்கை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவிற்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

கொழும்பில் உள்ள அரசுத் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் ஆயர் அரசுத் தலைவருடன் கலந்துரையாடினார்.

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினை, மின்சக்தியை பெறுவதற்காக மன்னாரில் காற்றாலை அமைக்கும் செயற்பாடுகளால் எழுந்துள்ள பாதிப்புக்கள், வடக்கு மாகாண அரசின் கீழ் உள்ள மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வர வேண்டியதன் அவசியம் போன்ற விடயங்கள் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன.

கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினைகளையும் அதனால் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பாதிப்புக்களையும் ஆயர் அரசுத்தலைவர்க்கு எடுத்து விளக்கியபோது அச்செயற்பாடு முற்றாக நிறுத்தப்படும் என அரசுத் தலைவர் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

மின் சக்தியை பெறுவதற்காக மன்னாரில் காற்றாலை அமைக்கும் செயற்பாடுகளால் எழுந்துள்ள பாதிப்புகள், இத்திட்டத்திற்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் போராட்டங்கள் தொடர்பாக அரசுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன், குறிப்பாக மக்களுடன் பேச்சு நடத்தப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அரசின்ன கீழ் உள்ள மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை ஆயர் வலியுறுத்திய போது இது தொடர்பாக உரிய அமைச்சர்களுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக அரசுத் தலைவர் உறுதி அளித்துள்ளார்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# வைத்தியசாலைக்கு சென்ற யுவதியைக் காணவில்லை

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா வைத்தியசாலைக்கு சென்ற இளம் யுவதி ஒருவரைக் காணவில்லை என நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, தம்பனை புளியங்குளம் பகுதியில் வசித்து வந்த 22 வயது இளம் யுவதி ஒருவர் தொடர் தலைவலி காரணமாக மருந்து எடுப்பதற்காக பேரூந்தில் திங்கட்கிழமை வவுனியா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். அவர் வைத்தியசாலையில் மருந்து எடுத்துள்ளார் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. நேற்றுவரை அவர் வீடு வந்து சேரவில்லை. உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தேடிய பெற்றோர் இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாடு தொடர்பாக நெளுக்குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுப்பிரமணியம் சர்மிளா (வயது 22) என்ற இளம் பெண்ணே காணாமல் போனவராவார். இவர் பற்றி தகவல் தெரிவந்தவர்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது அல்லது 0758446312, 0768446683 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ தகவல் வழங்குமாறு உறவினர்கள் கோரியுள்ளனர். (100)

# வலுச்சக்தி அமைச்சர் மீது லஞ்ச குற்றச்சாட்டு இல்லை

## விசாரணை நடந்தால் முழு ஒத்துழைப்பு என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

வலுச்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மீது இலஞ்சம் அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் எவ்வித குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை. எவ்வாறிருப்பினும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசதகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலஞ்சம் அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் இது தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை. ஆனால் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குமார ஜயக் கொ அமைச்சுப் பொறுப்பினை ஏற்ற பின்னர் இடம்பெற்ற எந்தவொரு சம்பவத்தையும் குறிப்பிட்டு இந்த செய்தி வெளியிடப்படவில்லை. 2005 முதல் 2015 வரை அரச உத்தியோகத்தராக பணியாற்றிய நிறுவனத்தில் அவருக்கு கீழ் பணியாற்றிய சிலரால் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் செயற்பாடுகள் தொடர்பிலேயே குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும். தேவையேற்பட்டால் அவ்வாணைக்குழுவால் வழக்கு தாக்கல் செய்யவும் முடியும். எமது அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை வகிக்கும் எந்தவொரு அமைச்சருக்கு எதிராகவும் அமைச்சுப்பதவியை ஏற்க முன்னர் இடம்பெற்ற எந்தவொரு சம்பவம் தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுமாயின் அவை தொடர்பான விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

இதுவே எமது ஆளும்தரப்பின் கொள்கையாகும். இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாகவே ஆளும்தரப்பின் வெளிப்படை தன்மை வெளிப்படும். எனவே விசாரணைகளுக்கமைய அமைச்சரின் பக்கத்திலுள்ள நியாயத்தை கூறி, அவர் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க முடியும் என்றார்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## கதவடைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவளிப்பதாக கூறியிருந்தனர். இந்த கதவடைப்பு புனிதமான நோக்கத்துடன், இலங்கையில் மக்களுக்கு நடந்த பெரும் அநியாயத்திற்கு எதிரானவொன்றாக செய்யப் பட்டது என்று இவர்கள் நினைக்கின்றார்களா? மக்கள் மிகத் தெளிவாக, புத்தியுடன் செயற்பட்டு தமிழ் அரசுக் கட்சியையும், முஸ்லிம் காங்கிரஸையும் புறக்கணித்துள்ளனர். இந்த கதவடைப்பு என்ன நோக்கத்திற்கானது? தமிழ் அரசுக் கட்சி தமது அரசியல் நோக்கத்திற்காக இந்த போராட்டத்தை திட்டமிட்டது .

இந்த ஆளும்தரப்பு இனவாதத்தை எதிர்க்கின்றது. இனவாதத்தை தலைதூக்க இடமளிக்க மாட்டோம் என்று ஆளும்தரப்பு உறுதியாக கூறுகின்றது. நாங்கள் மிகத் தூய்மையாக மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்திலேயே அரசியல் செய்கின்றோம். இதனால் இந்த கதவடைப்பு ஏனைய சமுகத்தினருக்கும். ஏனைய பிரதேசங்களுக்கும் நல்ல முன்னுதாரணமாக இருக்கும்.

தேசிய மக்கள் சக்தி மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியை போன்றது என்று சுமந்திரன் கூறுகின்றார். ஆனால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி அன்று பிள்ளையான் மற்றும் கருணா அம்மான் ஆகியோர் முன்னெடுத்த செயற்பாடுகளில் இறங்கியுள்ளதாகவே பார்க்கின்றோம். அவர்களுக்கு தேவையென்றால் கடையடைப்பை செய்யுமாறு கூறுவார்கள். ஹர்தாலுக்கு செல்ல காரணமான சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஏன் இந்த அரசியல் நாடகம்?

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் என்பன இருப்பை இழந்து வருகின்றன. ரிஷாத் தலைமையிலான கட்சி இதனை ஆதரிக்கவில்லை. ஆளும்தரப்பு மக்களுடன் இருக்கின்றது. மக்கள் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றனர். ஆளும்தரப்பின் பலமும் அரசாங்கத்திற்கு தமிழ், முஸ்லிம் மக்களிடையில் இருக்கின்ற பெரும் ஆதரவும் இந்த கதவடைப்பு மூலம் வெளிப்பட்டுள்ளது. எனவே இந்த வாய்ப்பை ஏற்படுத்திய கதவடைப்புப் ஏற்பாடு செய்த தமிழ் அரசுக்கட்சி உள்ளிட்ட கட்சிகளுக்கு நன்றிகளை கூறுகின்றோம் என்றார்.

# நீதிமன்ற கட்டமைப்பை ஆளும்தரப்பு அரசியல் மயப்படுத்துவதற்கு முயற்சி

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

நீதிமன்ற கட்டமைப்பை அரசியல் மயப்படுத்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட வேண்டும்.அரசியல் தலையீடு இருத்தல்கூடாது. நீதித்துறையை அரசியல்மயப்படுத்தினால் பெரும் விளைவுகள் ஏற்படும் என சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரிகளை வரையறையற்ற வகையில் அதிகரித்து அரவ வருமானம் அதிகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. அரச சேவை முழுமையாக அரசியல் மயப்படுத்துப்பட்டுள்ளது. பொலிஸ் சேவையும் அரசியலாக்கப்பட்டு அரசியல் நியமனங்கள் வழக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற கட்டமைப்பையும் அரசியல் மயப்படுத்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. நாட்டில் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட வேண்டும்.அரசியல் தலையீடு இருத்தல் கூடாது. நீதி த்துறையை அரசியல்மயப்படுத்தினால் பெரும் விளைவுகள் ஏற்படும் .ஆளும் தரப்பில முன்னிலையில் இருப்பவர்களின் வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.நாட்டு மக்கள் வெகுவிரைவில் பல விடயங்களை தெரிந்துக்கொள்வார்கள். நீதிமன்ற கட்டமைப்பை அரசியல் மயப்படுத்தினால் வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்கு வராது.

எதிர்க்கட்சியில் இருந்த போது மக்கள் பக்கம் இருப்பதாக குறிப்பிட்டீர்கள்.தற்போது அதிகாரத்தில் உள்ளீர்கள் ஆகவே மக்களின் தரப்பில் இருந்து செயற்படுங்கள். மத்திய வங்கியின் கையிருப்பு ரில்லியன் கணக்கில் உயர்வடைந்துள்ளதாக ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். அவ்வாறாயின் ஏன் நெல்லை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யாமல் உள்ளீர்கள்.

நாடாளுமன்றத்தில் வேண்டிய வரையில் பொய்யுரைக்க முடியும் என்று அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார்.இவர்களின் கருத்து முரண்பட்டதாகவே காணப்படுகிறது. தேசியபாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் எதிர்க்கட்சிகள் மீது பழிசுமத்துவதை பிரதான கொள்கையாக ஆளும்தரப்பு கொண்டுள்ளது. விமர்சனங்களை தவிர்த்து விட்டு மக்களுக்காக செயற்படுங்கள் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஆளும்தரப்பு பணம் அச்சிடவில்லை சட்டத்தில் அதற்கு இடமுமில்லை

## பிரதிநி நிதி அமைச்சர் தெரிவிப்பு

.ஆளும்தரப்பு பணம் அச்சிடுவதாக தெரிவிக்கப்படும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை. ஆளும்தரப்பின் தற்போதைய நிலைமையில் பணம் அச்சிடுவதற்கு ஆளும்தரப்புக்கு இயலுமை இல்லை. சட்ட ரீதியில் அதற்கு அனுமதி இல்லை என நிதி பிரதி அமைச்சர் அனில் பெர்ணான்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த ஆளும் தரப்பு மிகவும் சிரமத்துடன் செயற்பட்டு வருகிறோம். அதனால் இந்த நடவடிக்கைக்காக ஆளும்தரப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில் நாங்கள் ஒரே சந்தர்ப்பதில் இரண்டு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகிறோம். அதாவது நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதுடன் எமது பொருளாதாரத்தை விரிவாக்குவதற்கு போதுமான முதலீடுகளை கொண்டுவர வேண்டி இருக்கிறது. முதலீட்டாளர்களை அழைத்து வருவதே மிகவும் முக்கியமானதாகும். அதேபோன்று முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஸ்திரப்படுத்துவது முக்கியமாகும்.

இதனை நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியிலும் ஸ்திரப்படுத்தி வரும்போது, எங்களுக்கு நாட்டுக்குள் இருந்து, எதிர்க்கட்சியில் தெரிவுசெய்யப்பட்ட சில குழுக்கள் அரசியல் நோக்கில் திட்டமிட்டோ அல்லது வேறு காரணங்களுக்காக இந்த ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பல விடயங்களை மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக ஆளும்தரப்பு பெரும்ளவில் பணம் அச்சிடப்போவதாக சமூகத்தில் பீதியை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன. இவர்கள் இதனை திட்டமிட்டு மேற்கொள்கின்றனர். அல்லது புரியாமல் மேற்கொள்கின்றனர். எமது அரசாங்கத்தினால் 1200 பில்லியன் பணம் அச்சிட்டுள்ளதாக ஒரு அமைப்பு தெரிவித்திருக்கிறது.

ஆளும்தரப்பின் தற்போதைய நிலைமையில் பணம் அச்சிடுவதற்கு ஆளும்தரப்புக்கு இயலுமை இல்லை. சட்ட ரீதியில் அதற்கு அனுமதி இல்லை. அதனால் நாங்கள் பணம் அச்சிடுவதில்லை. அதேநேரம் பணம் அச்சிடுவதென்றால் நாணய தாழ்களை அச்சிட்டு சந்தைக்கு விநியோகிப்பது என்றே சிலர் நினைக்கின்றனர். ஆனால் அவ்வாறு இல்லை. இங்கு பணம் அச்சிடுவது என்பதன் அர்த்தம், சந்தைக்கு பணத்தை விரிவாக்குவதாகும். நாட்டில் இருக்கும் கையிருப்பு பணத்தை மத்திய வங்கியே நிர்வகித்து வருகிறது. ஆளும்தரப்பு எந்தவகையிலும் நிதி விநியோகத்தை அதிகரித்ததில்லை. நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு தொகை மற்றும் அரசாங்கத்திடம் இருக்கும் பணத்தொகையை மத்திய வங்கியின் இணையத்தலத்தில் வாராந்தம் வெளியிடப்படுகிறது. பிழையான தகவல் தெரிவிப்பவர்கள் இதுதொடர்பில் அறிந்துகொள்ளலாம்.

எனவே ஆளும்தரப்பு பணம் அச்சிட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை. மக்களை ஏமாற்றுவதற்காக தெரிவிக்கப்படும் செய்தியாகும். நாட்டில் வெளிநாட்டு கையிருப்பாக 1.6 ரில்லியன் இருப்பதுடன் விரிவான நிதி விநியோகம் 15 ரில்லியன் வரை இருக்கிறது. கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் விரிவான நிதி அபிவிருத்தியில் ஓரளவு அதிகரிப்பு காணப்படுகிறது.அதாவது மத்திய வங்கியின் செயற்பாடுகளின் மூலமே அது இடம்பெற்றிருக்கிறதே தவிர, அரசாங்கததின் நடவடிக்கையால் அல்ல. அதாவது ஆளும்தரப்பு பணம் அச்சிடவில்லை என்பது தெளிவாகிறது.

அத்துடன் பொருளாதார ஸ்திரத்ததன்மையை ஏற்படுத்தும்போது உள்நாட்டுசவால்களுடன் வெளிநாட்டுசவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவின் தீர்வை வரி தொடர்பில் ஆளும்தரப்பின் குழுவொன்று அதுதொடர்பில் கலந்துரையாடலுக்கு சென்றிருந்தது. அதன்போது ஒருசிலர் எமக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை தெரிவித்தனர். அதாவது, நாங்கள் கலந்துரையாடலைசரியான முறையில் மேற்கொள்ளவி ல்லை, சரியான உறுப்பினர்களுடன் கலந்துரையாடவில்லை என பல்வேறு விடயங்களை தெரிவித்து வந்தனர். இவ்வாறு எமது நடவடிக்கைகளை குழப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அதற்கு நாங்கள் சிக்கிக்கொள்ளாமல் எமது நடவடிக்கையை முறையாக மேற்கொண்டு சென்று எமக்கு விதிக்கப்பட்டிருந்த நூற்றுக்கு 44வீத வரியை நூற்றுக்கு 20 வீதம் வரை குறைத்துக்கொள்ள முடியுமாகி இருக்கிறது. இதனை நாங்கள் பெரும் வெற்றியாகவே பார்க்கிறோம்.

அதேநேரம் இந்த அமெரிக்க வரி அதிகரிப்பு தொடர்பில் இந்தியா உள்ளிட் வேறு நாடுகளின் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி, எம்மை விமரிசித்தனர். ஆனால் நாங்கள் எமது நடவடிக்கைகளை சரியான முறையில் செய்ததால், எமக்கு அமெரிக்க தீர்வை வரியை குறிப்பிடத்தக்களவு குறைத்துக்கொள்ள முடியுமாக இருக்கிறது. அதேநேரம் இந்தியாவுடன் நாங்கள் சிறந்த ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அமெரிக்காவின் வரி தொடர்பில் இந்தியாவுக்கு ஏற்பட்ட விடயம் தொடர்பில் நாங்கள் ஒருபோதும் இந்தியாவை பார்த்து சிரிக்கவில்லை. எதிர்க்கட்சியினரே தங்களின் தவறை மறைப்பதற்கு இவ்வாறான பொய் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டனர். அதனால் தவறான தகவல்களை தெரிவிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## குறிஞ்சாத்தீவு உப்பளத்தை மீண்டும் இயக்க அமைச்சரவை அனுமதி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த குறிஞ்சாத்தீவு (ஆனையிறவு வடக்கு) உப்பளத்தின் உற்பத்தி மற்றும் தொழிற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த உப்பளத்தின் செயற்பாடுகளை அரச - தனியார் பங்குடமை முறைமையின் கீழ் ஆரம்பிப்பதற்காக உள்நாட்டு முதலீட்டாளர்களிடம் முன்மொழிவு விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும், அதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு இயலாமல் போயுள்ளது.

அதனால், குறிஞ்சாத்தீவு (ஆனையிறவு வடக்கு) உப்பளத்தின் உற்பத்திநடவடிக்கைகளைஅரசதனியார்பங்குடமைமுறைமையின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதற்காக சர்வதேச முன்மொழிவு விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அனுமதி

பரந்தன் - கரைச்சி -முல்லைத்தீவு (பு035) வீதியின் வட்டுவாகல் பாலத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வட்டுவாகல் பாலம் என அழைக்கப்படும் பரந்தன் - கரைச்சி- முல்லைத்தீவு வீதியின் 50ஃ1 ஆம் இலக்க பாலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் களப்புக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இறுதியாக திருத்தப்பட்டுள்ள குறித்த பாலம் தற்போது பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. அதனால், வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் இருவழிப்பாதையுடன் கூடிய புதிய பாலமாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக, தேசிய போட்டி விலைமனுக் கோரல் முறைமையின் அடிப்படையில் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளுக்கமைய, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான எம்.எஸ். ஆர்.ஆர். தனியார் நிறுவனத்துக்கு பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்; சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### தெல்லிப்பழை வைத்தியசாலை விவகாரம்:

# முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் ஏன் விசாரணை எதுவுமில்லை?

## நாடாளுமன்றில் அருச்சுனா கேள்வி

தெல்லிப்பழை வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறையாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் இதுவரையில் சம்பந்தப்பட்ட நபர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை என யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா கேள்வி எழுப்பினார்

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலையியல் கட்டளைகள் 27/2இன் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சரிடம் கேள்வியெழுப்பிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான ஒரே ஒரு புற்றுநோய் வைத்தியசாலையாக தெல்லிப்பழை வைத்தியசாலை அமைந்திருக்கிறது. தெல்லிப்பழை வைத்தியசாலையின் ஒரு பகுதியாக புற்றுநோய் பிரிவு இயங்கி வருகிறது. இவ் வைத்தியசாலை மாகாண அமைச்சின் கீழ்வரும் பி பிரிவு ஆதார வைத்தியசாலை ஆகும். இந்த வைத்தியசாலையில் கணக்காளர் ஒருவர் கடமையாற்றுவதில்லை. இந்த வைத்தியசாலை நேரடியாக பிராந்திய வைத்தியசாலை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் கேதீஸ்வரனின் கீழும் மற்றும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் சமன்பத்திரனவின் கீழும் நிர்வகிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவில் பொறுப்பு வைத்தியராக கடமை புரியும் வைத்தியர் கிருசாந்தி வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவுக்கான தனிப்பட்ட பண கொடுக்கல் வாங்கல்களை செய்து கொண்ட வங்கி கணக்கிலக்க புத்தகங்கள் இரண்டு பிடிபட்டிருப்பதும் அது தவிரவும் வைத்தியர் கேதீஸ்வரன் புற்றுநோய் பிரிவுக்கான மாகாண பொதுச் செயலாளரின் அனுமதியின்றி 30 மில்லியன் பெறுமதியான கட்டட ஒப்பந்தம் ஒன்றை முறையற்ற விதத்தில் மேற்கொண்டு இருப்பதும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருந்தும் இதுவரை சுகாதார அமைச்சினுடாகவும் அதே நேரம் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவாலும் (2025.06.03 ) முறையிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பும் கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை

இது இந்த ஆளும்தரப்பு தெற்கில் மட்டும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவைபயன்படுத்திஅரசியல்ரீதியானபழிவாங்கல்களை மேற்கொள்கின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாக பொது மக்களால் எடுத்துக்கொள்ளப்படக்கூடும். இதனால் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சரிடம் பின்வரும் கேள்விகளை கேட்க விரும்புகிறேன்.

அதாவது, இந்த விடயம் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறையாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் (2025.06.03) இன்று வரை சம்பந்தப்பட்ட இது வைத்தியர்களும் கைது செய்யப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சம்பந்தப்பட்ட புற்றுநோய் அலகிற்கு பொதுமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஆளும்தரப்பின் கணக்கில் வைப்பில் இடப்படாத பணம் எவ்வளவு? இந்த நிதி மோசடி தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு ஆராய அதிகாரம் உண்டா?

புற்றுநோய் வைத்தியர் கிருசாந்தியால் பிராந்திய வைத்தியசாலை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் கேதீஸ்வரனின் அனுசரணையுடன் பொதுமக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது தங்களுக்கு தெரியுமா? அப்பணம் தனிப்பட்ட வங்கி இலக்கங்களில் இடப்பட்டு வைத்தியசாலையில் இருந்து களவாடப்பட்டது தங்களுக்கு தெரியுமா? தெரிந்திருந்தும் ஏன் இன்றுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை?

ஒரு வைத்தியசாலையின் கன்சல்டன் ஒருவர் பொதுமக்கள் இடம் இருந்து நன்கொடையினை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தெரியாமலும் கேதீஸ்வரன் அனுசரணையுடன் பெற்றுக் கொண்டு நிதி நடவடிக்கையில் ஈடுபட முடியுமா?

அந்த வைத்திய சாலையில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் கட்டட ஒப்பந்தக்காரர் இருவருக்கும் இடையே ஒப்பந்தமின்றி தனிப்பட்ட ரீதியில் முப்பது மில்லியன் பெறுமதியான ஒப்பந்த ஒன்றை வைத்தியர் கேதீஸ்வரன் செய்திருப்பது தெரியுமா? அவ்வாறான ஒப்பந்தம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடாக வழங்கப்பட்டும் ஏன் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை?

இந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் நாடாளுமன்றத்திலும் மேலதிகமாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டு இதுவரை சம்பந்தப்பட்ட வைத்தியர் கைது செய்யப்படாதது ஏன்?

தங்களுடைய ஆளும்தரப்பு இவ்வாறான திட்டமிட்ட ஊழல்களுக்கு எந்த நடவடிக்கை எடுக்காமலும் விசாரணைகள் மேற்கொள்ளாமலும் இருப்பதற்கான காரணம் என்ன?

இனிமேலாவது இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட கணக்கு இலக்கம் ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட கட்டட ஒப்பந்தம் ஆராயப்பட்டு அவர்களை கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்த முடியுமா? எனக்கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால இரு வார கால அவகாசம் கோரினார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2025இல் வெளியிடப்பெற்றது